பௌர்ணமி கலை இலக்கிய வட்டத்தின் வெளியீடு - 2006




காலாண்டு இலக்கிய இதழ்

கன்னி இதழ் ( செப்டம்பர்- டிசம்பர்2006)

## வாழ்வு இனிது

இதயத்துடிப்பின் ஓசை
சாதாரண செவிகளுள்
நுழைந்து நெஞ்சறையை
அதிர்விக்கும் இராப் பொழுதொன்றில்
பெருஞ்சபையில் மோதிய
அவமானத்தின் சுழற்சியாய்
உயிர் பிழிந்து போடும்
பார்த்தும் பாராமல் போன
உன் மௌனம்...


மண்ணில்
இறுக்கம் தளர்த்தி
அரித்துச் செல்லவா வருகிறது
பூமிக்கு இந்த மழை..?

யாரின் உள்ளங்கைக்குத் தான்
எளிதாய் வந்து சேர்கிறது
தமை விட கனமான
ஏக்கத்தின் நிறைவு...

அங்கு ஒரு மல்லிகைப்பூ
வண்டு வந்தமராமல்
வயதாகி உதிர்ந்தும்
செடியின் அடியில்
புன்னகைத்துக் கிடக்கிறது.

சின்னஞ்சிறு பூவே
எனக்கு வாழ்க்கையை
கற்றுக் கொடு...

**வே. தினகரன்**
பத்தனை



**ஆலோசனை:**

P. சத்தீஸ்
(மேலதிக கல்விப்பணிப்பாளர்)

P. இராமானுஜம்
(ஊடகவியலாளர்)

**பிரதம ஆசிரியர்:**

K. காந்தரூபன்

**இணை ஆசிரியர்:**

V. தினகரன்

**இதழாக்கக்குழு:**

மரியா என்டனீட்டா

V. ராஜ்

R. மனோகரன்

A. முருகதாஸ்

S. விஜயபிரதாபன்

I. பாரதிராஜா

S. பத்மநாதன்

ஓவியம்:

S. ஸ்ரீஹரன்

Type Setting:
திருமதி·சுதர்ஷினி ஸ்ரீதரன்
**Unisys Management Sys**
Kotmale road;
Nawalapitiya.

## 'கலையே ஆன்மாவின் ஸ்பரிசம்'

### அகல் ஆசிரியரிடமிருந்து.....

கலை என்பது மனித உணர்வோடும் வாழ்வோடும் பின்னிப் பிணைந்தது என்பர். இத்தகைய கலைகளை எவனொருவன் துணிந்து வெளிப்படுத்துகிறானோ அவனை சமூகத்தில் காலகிரமத்தில் கலைஞன் என வெளிகொணரப்படுகின்றான்.

இத்தகைய தன்மை கொண்ட இளம் இளைஞர்களை ஒன்றிணைக்கும் முயற்சியின் சிறு பங்களிப்பே எமது பௌர்ணமி கலை இலக்கிய வட்டத்தின் பிரதான மையப்பொருளாகும்.

இந்நோக்கத்தின் முதல் செயற்பாடாகவும் கன்னி முயற்சியாகவும் "அகல்" எனும் முதல் மலரொன்றை இன்று மலரச் செய்வதில் பெருமகிழ்வடைகறேன். இது கலைஞர்களால் கூடி இழுக்கப்படும் தேர். இதற்கு வடம் பிடிப்பவனில் ஒருவனாகவே நான் இருப்பதனால் என் கூற்று யாவும் தேர் இழுப்பது போன்று இம்மலரை மலரச் செய்யவும் மலர் குழுவின் கூற்றேயாகும்.

ஆகவே கீதாசாரம் சொல்வது போல் எதனை கொண்டு வந்தோம் எதனை கொண்டுக் செல்ல, இருக்கும் வரை எதையாவது விட்டுச் செல்வோம் அத்தகைய முயற்சிக்கு கலைஞர்களை அணித்திரள்வோமென அன்பு கரம் நீட்டுகிறேன்.

அன்புடன்
-ஆசிரியர்-

HOME LIBRARY

விலாசம்:
பௌர்ணமி கலை இலக்கிய வட்டம்'
கட்டபுலா தமிழ் மகா வித்தியாலயம்,
தலவாக்கலை வீதி,
கட்டபுலா.



# பொருளடக்கம்


- நெய்தல், தையல்
- இந்து மதம் காட்டும் சமூதாய விழுமியங்கள்
- உள்ளதை எழுதச் சொல்கிறது உள்மனது
- தெய்வம்
- பாதை மறந்த கால்கள்
- பொன்மொழிகள்
- துப்பாக்கி விடும் கோரிக்கைகள்
- சூரியனுக்கு நிகர்
- அழிந்து செல்லும் மலையக கலைகள்
- கவிதைத் துளிகள்
- உன் பிரிவால்...
- துயரில் உறைதல்




# நெய்தல் தையல்

தெளிந்த நீர்ப்போல்...
தெளிவான நிலாவொளி...
தலைவியின் முகத்திலோ...
தடுமாற்றமான கலக்கம்...
உள்ளமோ கலங்கித் தவிக்கிறது..!!

மாலை பொழிவதினிலே...
காலையவன் மீன்பிடிக்க...
வேலைக்கு சென்றிட்டான்...
பேதையவளோ கலங்குகிறாள்...!!

ஓ... காற்று வீசுகிறதே...
கடலலைகள் மேலெழுமே...
பெரிய மீன்களெல்லாம்...
துள்ளியெழுமே
தலைவன் சென்ற...
படகோ சுழன்றாடுமே...!!

ஆ... மின்னல் வெட்டுகிறதே...
கடலிருலில் அவர்
எப்படி தவிக்கிறாரோ...
இடி வேறு முழங்குகிறதே...
அவர் இதயம் தத்தளிக்கிறது...!!!

குடிலினுள் அவளாள் இருப்புக் கொள்ள
முடியவில்லை..
கதவை திறக்கிறாள்....!
வெளியே எட்டிப்பார்க்கிறாள்...!!!

அவள் கண்களை
அவளாள் நம்ப முடியவில்லை
பிரம்மிக்கிறாள்...
என்ன ஆச்சரியம் – வெளியே
நிலவின் ஆட்சி நடக்கிறது...!!

காற்று மழையென
மனபிரம்மைக்குள்... அவள்
உள்ளானதையெண்ணி
நாணுகிறாள்...! தனக்குள்ளே
மெல்லச் சிரிக்கிறாள்...!!

குடிசையினுள்ளே செல்கிறாள் ...
நாளை நலமோடு...
அவர் வருவாரென..
ஆறுதலை அள்ளிப்பருகிக்
கொள்கிறாள்..!!!

– விழி –
நாவலப்பிட்டி.



## இந்து மதம் காட்டும் சமுதாய விழுமியங்கள்

எந்த மதத்தையும் விமர்சனத்திற்கு இழுக்க முடியாது. ஆனால் விமர்சிக்க கூடிய ஒரேயொரு மதம் இந்து மதம். எத்தனையோ விமர்சனங்களை தாண்டி இன்னமும் தலை நிமிர்ந்து கொண்டிருக்கிறது. என்றால் அதற்கு ஒரே காரணம் இந்து மதத்தின் சிறப்பு.

இந்து மதம் என்ற வேறுப்பாட்டை மறந்து மனிதனாய் எல்லோரையும் உள்வாங்கி ஒவ்வொருவனின் உள்ளத்திலும் ஊற்றாய் ஆர்ப்பரித்து வாழவைத்துக் கொண்டிருக்கிறது. இந்து மதம் விஞ்ஞானத்தையும் தாண்டிய ஒரு மெய்ஞான பொருளாக மத ரீதியான எந்தவொருகட்டுப்பாட்டையும் விதிக்காமல் ஒற்றுமையை வலியுறுத்தி நிற்கும் அதே வேளை மனிதனின் ஆத்ம ஞானத்தினை தட்டி யெழுப்புகிறது. அதன் முலம் நெறிப்படுத்திய உயரிய வாழ்விற்கு வலி கூறுகிறது. நமக்கு மேலே ஒரு சக்தி இருப்பதாய் எண்ணிக் கொள்வதால் தானே ஒவ்வொரு நல்ல மனிதனும் பிழைகள் செய்ய தயங்குகிறான். வேதத்தை ஆதாரமாக கொண்டு இயங்கும் இந்து மதம் கொண்டுள்ள ஒவ்வொரு சாஸ்த்திர, சடங்குகளும் முக்கியமானது. பல வழிகளில் வாழ்விற்கு ஆதாரமாயிருக்கிறது. எனவே இந்து மத சம்பிரதாயங்கள் எவையும் மூட நம்பிக்கையாக கருதக்கூடாது.

"பரம் பொருளின் மீது பற்றுவை
நிலையற்ற பொருட்களின் மீது
ஆசை வராது", என்பது இந்து மதத்தின் ஆதாரம் வாழ்வின் நிலையாமையை பல வழிகளில் உணர்த்துகிறது. அத்தோடு ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பனவற்றினூடே மனிதனின் மனோ ரீதியான விழுமியங்களை வெளியுலகிற்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது. உருவாக்கமோ, உருவாக்கப்பட்டவனோ இன்றி நம்பிக்கையை மட்டும் ஆதாரமாக கொண்டு இயங்கும் இந்து மதம் மனிதனுக்கு சமுதாயத்திற்கு பல்வேறு வகையில் பண்பட்ட நெறியான வாழ்வின் வழியினை காட்டிக்கொண்டிருக்கிறது. இனிவரும் ஒவ்வொரு அகழ் சஞ்சிகையின் ஒவ்வொரு விடயம் பற்றிய விபரத்தைப் பார்ப்போம்.

*ஆ. சரவணகுமார்*
*கடியலேனை.*

# உள்ளதை எழுதச் சொல்கிறது உள்மனது....!

உள்ளதை எழுதச் சொல்கிறது
உள் மனது...!

ஆயுத முனையில் நின்று
சமாதான பேச்சுவார்த்தை
புரியும் அரசியல்வாதியோடு
அரசியலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது...!

பக்கத்திருப்பவன் வலியை
அறிந்துக்கொள்ள முடியாதவன்,
எங்கோ துடித்துக் கொண்டிருக்கும்
சமூகத்திற்கு, சன்மானம் கொடுக்கிறான,
தன் பெயர் பிரபல்யத்திற்கு...!
என்னவென்பது...
உள்ளதையெழுதச் சொல்கிறது
உள்மனது....!

கண்களுக்கே பார்க்க
தகுதியற்றதை – தன்
வாழ்விற்கு சொந்தமாக்கிக்கொள்ள
துடிக்கிறான் விகாரமானவன்.

பணத்திற்காய் சிலவேளை மண்டியிட்டும்
பல நேரங்களில் தண்டிக்கப்பட்டும்
கொண்டிருக்கிறான் ஏழ்மையாளன்...!
என்னவென்பது...
உள்ளதையெழுதச் சொல்கிறது
உள்மனது....!

உதட்டளவில்-சிரித்தபடியே
உள்ளத்தில் விஷங்களை
சேகரித்து சமிபாட்டை
சிறப்பாய் செய்து கொண்டிருக்கிறான்
துரோகத்திற்குரியவன்
என்னவென்பது...
உள்ளதையெழுதச் சொல்கிறது
உள்மனது....!



நா.மரியா என்டனீட்டா
–நாவலப்பிட்டி–

# தெய்வம்

உயிருக்கு நிகராக கலந்து
உறவு பின்னலில் பிணைந்து
காலமெல்லாம் காற்றாடியாய்
சுழலும் என் தெய்வமே!

உன் பாசம் ஈடினையற்ற
அமுத சுரப்பி
உன் பரிகாசமோ
பாற்கிணறு, இவ்வளவில்
என்னுயிரை தன்னுயிராக்கி
காத்த உன்னை எங்கனம்
புகழ்வேன்!

எனக்கென நேரிடும் இழப்பு
கண்டு அதை தனக்கென
போல் கொண்டு தவிக்கும்
உன் உள்ளம் தான் எத்தகையது!

தன்னலத்தில் தனிமை காக்கும்
இப்பாரில் என்னலத்தில் இனிமை
பார்க்க நினைக்கும்
உன் உருகிய உள்ளம் தான் எத்தகையது!

தன்னழகை இருளாக்கி இதனுள்
என்னழகை மட்டும் ஒளியாக்க நினைக்கும்
உன் நினைப்புத் தான்
எத்தகையது!

உனக்கான அன்னத்தை எனக்கு
கொடுத்துவிட்டு நீ பட்டினி கிடந்தாயே!
அறியாத நான் மகிழ உண்ண அதைப்
பார்த்த நீ மகிழ்ந்தாயே,
உன் பாசம் எத்தகையது!

தன் மகன் நல்லப் பிள்ளை
ஊர் புகழும் செல்லப்பிள்ளை என்ற
வாசகங் கேட்டதும் உடல், உள்ளம்
பூரித்து பொங்கினாயே,
உன் உறவு தான் எத்தகையது..!

முப்பது நாள் பகலிரவாய் பாய் மீதில்
நான் படுத்திருக்க அதைத் தாங்காத
நீ முப்பது கோயில் ஏறிறங்கினாயே
என் மீதான உன் பற்றுத்தான்
எத்தகையது....

படிப்பறியேன், பள்ளிக்கூடம்
தானறியேன் என்று சொல்லிக்
கொண்ட நீ என்னை மட்டும்
படிப்பறியாய், பள்ளிக்கூடம்
தானறியாய் என்றாயே,
இன்னளவில் உன் இதய ஆசைதான்
எத்தகையது...

**இரா. மனோகரன்**
(தமிழ்ப்ரியன்)



# பாதை மறந்த கால்கள்

அழுதுக்கொண்டே கையசைத்த என் அம்மாவின் கண்ணீர் துளியையும், என் கண்ணீர் துளியும் தாய், மகளுக்கிடையிலான பாச உணர்வின் பிரிவுத் துயர் என வெறுமையாக சொன்னாலும் கனத்துக் கொண்டிருந்த என் மனம் இன்னும் அதை ஏற்றுக் கொள்ள தயாரில்லை.

இன்னும் ஏழு மணித்தியாலத்தில் இம்மண்ணை விட்டு வேறு மண்ணில் கால்பதிக்க இருக்கும் எனக்கு விமான நிலையத்தை நோக்கிய இந்த வாகன பயணம் விரைவாக இருந்தாலும் என்னை அறியாமலே என் மனம் மட்டும் அதை விட வேகமாக பின் நோக்கி சென்றுக்கொண்டிருந்தது.

எத்தனை இன்பமாக என் அம்மா, அப்பா தம்பி, தங்கையோடு நான் அன்றைய பள்ளி நாளில் பறவை போல் திரிந்தேன். பள்ளி விட்டு சற்று நேரமானாலும் பள்ளியருகிலேயே நின்று என்னைக்கூட்டி செல்லும் அப்பாவும், என்பசியையறிந்து தன் அடக்கிக்கொண்டு விளையாட்டாக கடிந்துக் கொண்டு சோறு ஊட்டும் அம்மாவும், எப்போதும் என் பாடக்கொப்பியிலேயே பக்கம் பறித்து கப்பல் விடும் என் தம்பியும்......

இத்தனை பாசக்குடும்பத்தை விட்டு எப்படி நான் நிதர்சனை தேடிச்சென்றேன். அன்றைய காதல் அத்தனை ஆழமாகிவிட்டதே எனக்கு!

அன்றைய பாடல் போட்டியில் முதலிடத்தைப் பெற்று பரிசு வாங்குவேன், என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. என்னோடு படிக்கும் சகதோழிகளிலொரு வரை இந்த வகுப்பாசிரியர் சேர்த்திருந்தால் என்ன? என எத்தனை முறை சளித்திருப்பேன். ஆனால் மாணவ இலக்கிய மன்றமே பாராட்டும் வகையில் என் பாடல் இப்படி என்னை பெருமைப்படுத்துமென்றால் நான் இன்னும் சிறப்பாக பாடியிருக்கலாம் என்று தோன்றியது.

'வத்ஸலா கொஞ்சம் நில்லுங்க' திரும்பிப் பார்க்கின்றேன். ஓட்டமும் நடையுமாக வந்த எமது சீனியர் ஆம், க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இவ்வருடத்தில் செல்லவுள்ள நிதர்ஸன், என்ன வத்ஸலா? எங்கெல்லாம் தேடுகிறது ஒங்கல நான் ரெகிங் பண்ணும் போது பாடச்சொன்னா பாடவே தெரியாதுன்னு சொன்ன நீங்களா இப்படி பாட்டுப்பாடி எல்லோரையும் அசத்திட்டீங்க! என்று சொன்ன நிதர்ஸன் "வாழ்த்துக்கள்" என்று சொன்னதோடு என் பதிலுக்கும் காத்திராமல் சென்றுவிட்டார்.

மனதுக்குள் ஒரு பெரிய மத்தாப்பு வெடித்தது போல் இந்த நிதர்ஸனின் செயல் எனக்குப்பட்டது. ரெகிங் காலத்தில் என்னை துரத்தி, துரத்தி ரெகிங் செய்த இந்த நிதர்ஸன் ஓடி வந்து இப்படி சொன்னது எனக்கு ஏதோ மிகப்பெரிய சாதனையொன்றை செய்துவிட்டால் போலிருந்தது. நான் பெற்ற பாடலுக்கான சான்றிதழ்களையும் பரிசையும் கொண்டுச் சென்று அப்பா, அம்மாவிடம் காட்டிய போது அவர்கள் கொண்ட மகிழ்ச்சி என்னை எங்கோ கொண்டு சென்று விட்டது எனலாம். இரட்டை மகிழ்ச்சியில் நான் என் உலகத்தையை மறந்தவள் போலானேன்.

பெரும்பாலும் கல்வி கற்பதில் நான் சுமாராக இருந்தபோதிலும் எனது குரல்வளம் செய்த சாகசமோ என்னவோ என்னை பள்ளியின் எல்லோரிற்கும் தெரிந்திருந்தது. அ ன ை ற ய நிலையில் இலக்கிய மன்றமென்றால் எனது பெயர் நிச்சயமாக நிகழ்ச்சி நிரலில் இருக்கும். பாடலைப்பாடி நான் முடித்துவிட்டு வரும் ஒவ்வொரு வேளையிலும் இந்த நிதர்ஸன் எப்படித் தான் வருவாரோ தெரியாது. என்னை வந்து பாராட்டுவதில் முதல் தலைக்காட்டுபவர் இவராகத்தானிருக்கும்.

இப்படி பாரட்டும் ஒவ்வொரு வேளையிலும் எனக்கு கிடைப்பதால் நான் பாடல் பாடி வந்து நிதர்ஸனை தேடுமளவிற்கு என் மனதில் பெயர் பதித்துக்கொண்டார். க.பொ.த உயர்தர மாணவர்களிற்கான பிரியாவிடை வைபவமொன்றில் நானும் பாடவேண்டுமென நிதர்ஸனாலும் கேட்டுக்கொண்டதுக்கிணங்க நான் பாடிய பாடல் எல்லோரிற்கும் அச்சந்தர்ப்பத்தில் கவலையைத் தோற்றுவித்ததாயினும் இந்த நிதர்ஸன் தன்னையறியாமல் அழும் விதம் மட்டும் என்னை அன்று இரவு முழுவதும் நித்திரைக்கொள்ளச் செய்யவில்லை.

மனம் என்னவோ கல்லாய் கனத்தது யாரிடம் சொல்வது எப்படிச் சொல்லவது என்ற நிலையில் இருக்க, இந்த நிதர்ஸன் அழுத அந்த குழந்தை முகம் என்னைப் பாடாய் படுத்தியது. அப்படியே என்பாட்டில் மனதைக் கொடுத்து தன்நிலையையும், பிரிவையும் எண்ணி அழுதவராயினும் எனக்கு ஏன் இப்படி மனம் கிடந்து ஆதங்கப்படுகின்றது. எனக்கே விடை தெரியாமல் வினா என்னைத் துளைத்தது.

ஒருவாறு என் மன உளைச்சலை மறைத்த வண்ணம் பள்ளிக்குச் சென்றபோதும் எமது வகுப்பிற்கு எதிராக இருந்த அந்த பிரியாவிடைப் பெற்றுச் சென்ற உயர் வகுப்பினர் இல்லாதது, வகுப்பறையே வெறிச்சோடிக் கிடந்தது. என் மனதை இது மேலும் துவளச்செய்தது.

என் சகமாணவிகளிடம் 'என்ன தான் இருந்தாலும் இந்த சீனியர்கள் போனதோடு எல்லாம் வெறிச்சோடிப் போய்விட்டது.' என வாய்விட்டு பலமுறை சொல்லியும் கேட்டு அதைப் பற்றி எவ்வித சலனமுமின்றி மகிழ்வாக தம்போக்கில் இருக்கின்ற தோழியரைப் பார்க்கும் போது அவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக கட்டிவைத்து உதைத்து தவைத்தெடுக்கனும் போல் இருந்தது.

சீ! 'என்ன நண்பர்கள் இவர்கள், இருக்கும் போது ஒன்றாய் கூடித் திரிபவர்கள் அவர்கள் இல்லாத போது கவலை என்பதே இல்லாதவர்களாகிவிடுகின்றார்களே' என நான் மற்றவரை திட்டியபோதும் என் மனதுள்ளே அந்த நிதர்ஸனைத் தவிர வேறு எவரும் நினைவுக்கு

அன்றும் பாடசாலையை விட்டு மாலை வகுப்புகளுக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த எனக்கு மழையும், காற்றும் என் குடையை மையம் வைத்தது போல் சுழன்று விசியதால் எரிச்சலடைந்த நான் குடையை மடக்கிய வண்ணம் நனைந்து சென்றுக் கொண்டிருந்தேன். என் நடை படிப்படியாக ஓட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

வத்ஸலா, வத்ஸலா என்ன இப்படி ஓடுறிங்க? குடையை விரிச்சு பிடிச்சுக்குங்க வத்ஸலா. என்ற குரல் அந்த மழையிலும் கேட்க குரல் வந்த திசை நோக்கி திரும்புகின்றேன்.

என்கண்களை எனக்கே நம்பமுடியவில்லை. "நிதர்ஸன்" அந்த மழைக்காற்றிலும் தன்னை மறந்து என்குடையை பிடிக்கச் சொல்லியவாறு அவர் குடையுடன் என்னருகில்

நிதர்ஸன் நீங்க எப்படி இங்க... எப்படீ இருக்கிறீங்க என்ற படபடப்புடன் கேட்டவண்ணம் நான் எதும் பேசமுடியாதவளானாலும் ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு 'காற்று, மழையால பிடிக்கல' நீங்க, நீங்க என்று கேட்டவண்ணமே தொடர்வதை நிதர்ஸன் தெரிந்துக் கொண்டிருக்க வேண்டும் உடன் தான் முன்வந்து 'இல்ல வத்ஸலா' உங்களை பார்க்கத்தான் வீட்டுக்குப் போய்யிருந்தேன். வீட்ல அம்மா இன்னும் நீங்க வரலன்னாங்க அதுதான் தேடி வந்தேன் என்றதோடு, தான் வந்த காரணத்தையும் தான் கேட்காமலே கூறிக்கொண்டிருந்தார்.

நிதர்ஸனது பேச்சும் என்னை பாடல் போட்டியொன்றிற்கு அழைத்துச் செல்ல வந்துள்ளதையும் கேள்விப்பட்டு மனம் மட்டுமல்ல எனது பள்ளிக்காலமே பரவசமாகி எனக்குள் பட்டாம்பூச்சிகளை கொண்டுவந்தன.

இளைஞர் மன்ற பாடல் போட்டியில் முதலாமிடம் பெற்றது கூட எனக்கு பெரிதாய் தெரியவில்லை. என்னைப் பாராட்டி கைக்குலுக்கி "வத்ஸலா" என் ஆசையை நிறைவேத்திட்டீங்க. அது போதுமெனக்கு என்ற நிதர்ஸன் தீடீரென "ஒன்று கேட்கப் போறேன். அது, அது நேராவே கேட்கிறேன் "என்னைப் பிடிச்சிருக்கா" ப்ளீஸ்.... பிடிக்கலன்னு மட்டும் சொல்லாதீங்க என்று கேட்ட வண்ணம் என் முகத்தையே பார்த்தது, மனதை என்னவோ செய்து என்மனதை பிழிந்து எடுத்த்து.

எப்படி இந்த நிதர்ஸன் ஏன் எதற்காக இப்படி எனைக்கேட்டதும், அப்படீனா என் மனதுக்குள் பல்வேறு கேள்விகள் தோன்றலாயின. எனினும் மனதில் இலேசான ஸ்பரிசமொன்று தென்பட்டது போல் உணரும் எனக்கு வீட்டை நினைத்தால் மறுபக்கம் பயமாக இருந்தது.

என் வயது, தொழிலில்லாத எனது நிலையும் அவரது நிலையும், எதை நம்பி எதிர்காலத்தை தீர்மானிக்கவிருக்கும் நோய்வாய்ப்பட்ட எனது அப்பா, அம்மா, தம்பி ஆகியோரது வாழ்க்கை எல்லாம் எனது நிதர்ஸனது மனஇணைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தது.

வழமையாகவே என்னை தண்டிக்க விரும்பாத பாசமுள்ள அப்பாவிடம் எமது இருவரது விருப்பத்தையும் தெரிவித்தது முதல் அவர் என்னிடம் பேசுவதையே நிறுத்திவிட்டார். அம்மா தான் அப்பாவினதும், தனதும் மனவேதனைகளை ஆழமாக அதேவேளை உருக்கமாகவும் தெரிவித்து இத்தொடர்பை முற்றாக எறிந்தார்.

அம்மாவால் என் நிலை புரியாத வகையில் அவர் கூறிய எந்த வார்த்தையும் என்காதுக்கு உரைத்ததாயில்லை. அப்பாவின் சுக நிலை எனக்கு ஒருபுறம் மனதையுறுத்தியதாயினும், நிதர்ஸன் மீது கொண்ட காதல் அதை பெரிதாக எடுக்க தோன்றவிடவில்லை. அதனால் இனிமேல் வீட்டில் போராடுவதை விடுத்து நிதர்ஸனோடு செல்வதற்கே தயாரானேன்.

என்மனம் இருக்கமானது, உறுதியானது காதல் என்று வந்துவிட்டால் தந்தையென்ன, பிள்ளையென்ன எல்லாம் மறைந்து மறந்து போகுமென்பது என்விடயத்தில் சரியாகிவிட்டது எனலாம்.

ஏற்கனவே நாம் எடுத்த தீர்மானமென்பதால் எமது பெற்றோர் போலல்லாது நிதர்ஸனது பெற்றோர் எம் காதலுக்கு பூரண சம்மதம் தெரிவித்தமையால் எம்வீட்டை விட்டு வெளியேறிவிட்டோம்.

அதன் பின் எமது வாழ்க்கை இன்பமயமாக அமைந்தது. வாடகைக்கு வீடெடுத்திருப்பினும் நிதர்ஸன் முதலில் அவரது மாமாவோடும், பின் தனித்தும் வியாபாரம் செய்தமையால் எம்வாழ்வில் வசந்தம் வீசுவதை உணரலானேன்.

ஒருவாறு எங்கள் காதல் வாழ்க்கை தொடங்கி ஆறு மாதத்தைக் கடந்து இனிமையாகப் போய்க்கொண்டிருந்தது. என் பெற்றோரைப் பற்றியோ என் தம்பியைப் பற்றியோ எதையும் தெரிந்துக் கொள்ள இயலாதவளாக இல்லை, விரும்பாதவளாகக்கூட இருந்தேன் என்றும் சொல்லலாம்.

இத்தனை அன்பான கணவனை இந்த பெருசுகளால் விடப்பார்த்தேனே என அவ்வப்போது எம்வீட்டாரைத் திட்டிய வண்ணமும் இருப்பேன்.

எங்கள் வாழ்க்கை இனிமையாகப் போய்கொண்டிருக்கும் வேளையில் நிதர்ஸன் வியாபாரம் கீழ்நோக்கி நகர்வதைக் என்னால் உணர முடிந்தது. அதை நிதர்ஸனிடம் கேட்ட போது அவர் அதை தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் நண்பர்களோடு மாலை மது அருந்தி வீட்டுக்கு வந்து நின்ற போது தான் அவர் கையில் நான் அணிவித்த மோதிரமும், ஏனைய வியாபார உடமைகளும் விற்கப்பட்டிருப்பதை அறிந்தேன். அவரது வேதனை எனக்கு நியாயமாகப்பட்டது. அவருக்கு உதவுவதாற்கான வழிமுறைகளை ஆராயலானேன். மனம் அவரை எண்ணி தவித்தது.

வீட்டைவிட்டு இறுமாப்போடு வெளிவந்த நான் பெற்றோரின் முன் நானும் வாழ்ந்துக்காட்டி அவர்கள் முன் சென்று என் கணவனோடு எப்படி வாழ்கின்றேன் பாருங்கள் என்று இறுமாப்போடும்,உறுதியோடும் இருக்கும் எனக்கு எமது வாழ்வில் வியாபார வீழ்ச்சியில் ஏற்பட்ட நிலைமை பெரும் பயத்தை உண்டு பண்ணியது.

என்னைப் பொறுத்தவரையில் நான் எடுக்கும் தீர்மானங்கள் எதுவும் பிழைப்பதில்லை. அதற்கேற்ப நான் வெளிநாடு சென்று உழைத்து என் குடும்பத்தை முன்னேற்றுவேன் என நான் எடுத்த தீர்மானத்தை நிதர்ஸனால் தடை செய்ய இயலவில்லை. என் வெளிநாட்டுப்பயணம் எனக்கு வெற்றியளித்தது, நான் வெளிநாட்டில் தொழில் புரிந்தபோதும் என் கவலையெல்லாம் என்கணவனை என் வீட்டார்

முன் கொண்டு சென்று அவர் சிறந்தவர் என நிரூபிக்க வேண்டுமென்பதிலேயே கவனமாக இருந்தது. அதனால் வேலை கடுமையான போதும் அதை நிதர்ஸனுக்கு அறிவிக்காமலே செய்து வந்தேன்.

வருடம் இரண்டு உருண்டோடியது, என்ன தான் நிதர்ஸனுக்கு அவ்வப்போது அனுப்பி இருந்தது அங்கு அவர் சிறப்பாக வாழ்வதும், நான் சென்ற பின் மகிழ்வாக வாழமுடியுமென்ற அவா. தூரத்திலில்லை என்று எண்ணிய போதும் தான் வரும் விமானம் மிக வேகமாக சென்று என் நிதர்ஸன் இருக்கும் மண்ணை அடைய வேணடுமென்பதிலும் எல்லையில்லா எதிர்பார்ப்பு எனக்குள் இருக்கவே செய்தது.

மண்ணைத் தொட்ட விமானம் எம்மை மண்ணில் இறங்கும் முன் என் கண்கள் நிதர்ஸனையே தேடலாயின. என் தேடல் நான் வசித்து வந்த வீடு வரை தொடருமென அப்போது நினைத் திருக்கவில்லை.

என் பணத்தில் கட்டிய புதிய வீட்டின் கதவை தட்டுபவளாக தட்டுகின்றேன். என் தட்டலுக்கு உள்ளே ஓசை கேட்டிருக்க வேண்டும் சில நிமிட நேரத்தின் பின் கதவை திறந்த பெண்ணை என்னால் அடையாளம் காணமுடியவில்லை. வீடு மாறி வந்துவிட்டோமோ என நினைத்த நான், நீங்க.... என்று தொடர முன் "நான் நிதர்ஸனின் வைப்" நீங்க என்று தொடர்வதற்கிடையில் என் அன்பு கணவன் நிதர்ஸன் புதிய கணவனாக அவளருகில்...

கண்கள் இருள 'எல்லாம் புரியாமல் புரிந்தது. நான் சென்ற பின் நான் அனுப்பிய பணத்தில் புதிய வீடு மட்டுமல்ல, புதிய மனைவியையும் பெற்றிருக்கின்றார் என்பது தெளிவானது.

என் அழுகை போராட்டங்கள் எல்லாம் என்னை விட்டு விலகி புது வாழ்வை தேடிய என் கணவனிடம் பலிக்கவில்லை. என் பணமே சட்டத்தால் என்னை அவரிடமிருந்து தூக்கியெறிய வழிவகுத்தது. என் அவா கனவு எல்லாம் தவிடு பொடியாகி என் பெற்றோரை விட்டுவிலகி அமைத்துக் கொண்ட புதுவாழ்வை சமூகம் பார்த்து எள்ளி நகையாடுவதாக உணர்த்தியது.

ஓட்டமும் நடையுமாக நகரை விட்டு என் தந்தை, தாய் வாழ்ந்த வீட்டுக்கு செல்கிறேன் என்பிரிவு தாளாமல் இறந்த என் அப்பாவின் படமும், கல்யாண கோலத்திலிருந்த என் தம்பியின் புகைப்படமும் என் கண்ணில் பட எதற்குமே உதவாத நிலையில் என் கண்கள் குழமாகி அம்மாவின் மடிதேடி முகம் புதைக்கலானேன். எதை மறைப்பது எதைச்சொல்வது என்று புரியாமல் ஓவென அழுதேன்.

வாழ்க்கை என்ற பாதையை சரியாக இனம் காணாது மாறிக்கிடந்த கால்களாக என் கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கின்றேன் இப்போது புரிய என்ன இருக்கிறது. இயல்பாக மனதைக் கட்டுப்படுத்த முனைகிறேன்.

"என்னம்மா போவதை எண்ணி அழுறீங்களா" வாகன சாரதியின் குரல் கேட்டு சுயவுணர்வுக்கு வரவும் வாகனம் விமான நிலையத்தை அடையவும் சரியாக இருந்தது. வாகன சாரதிக்கான பதில் மட்டும் சொல்லாமல்....

நிறைவு

ஆக்கம்: K.K.ரூபன்

# துப்பாக்கி விடும் கோரிக்கைகள்..!

எஎன்ன இனமடா இந்த இனம்...
என்ன இனம் ..?
ஏன் கதவுகள் மூடப்பட்டும் முண்டியடித்துக் கொண்டு
முட்டாள் தனமாய் திறந்துவிடுகிறதே
இந்த மனித இனம்...!

எனக்கு வெட்காமாயிருக்கிறது – அவன் விரல்
பாகம் என் உடலை தொடுகையில்..
ரத்த வெறிபிடித்த மனித கூட்டம் அரக்கத்தமாய்
என்னை ஆயுதமாய் பயன்படுத்தி ஆட்டிப்படைக்க
நினைக்கிறதே.. என்ன இனமடா?

நானென்ன உன் இனமா? உன் குலமா?
இல்லை உன்னைப் போல் உணர்வுகள் நிறைந்தவனா?
எனக்கென்ன தெரியும் உனது மனத்துடிப்பில்
நீ அசைத்தால் நான் அழித்துவிடுவேனடா – இதைத்
தவிர வேறென்ன எனக்குத் தெரியும்?

கனவுகள் உனது வாழ்க்கையின் பாதைகள்
உலக நியதிகள் உன் உணர்வுகள் உனக்கென்று
இருக்கையில் எங்களையேனடா
உன் உயிராய் எண்ணுகிறாய்?

நல்லவன், தீயவன், தாய், தந்தை, சகோதரன்,
உற்றார், உறவு இப்படி எத்தனை – மனித
உயிர்களை நான் அழித்திருக்கின்றேன் – மனித
இனம் கருவில் உருவாகிறது – எங்களினம்
உங்களின் கைகளிலே உருவெடுத்து – உன்னாலே
உன்னினத்தை நாங்கள் அழிக்கிறோம்.

உன்னை நினைத்து வெட்கிப் போகிறேன்..
“விலைப்போன ஜென்மங்கள் என்று”
துண்டு, துணடாய் உடல் தசைகளை கொய்து
துடி துடித்துப்போய் தொப்புள் கொடியை
துண்டாடி பட்டினிக் கிடந்த பாமரமக்கள்
இருதயம் துடிக்க என்னை
ஏவி விட்டாய் பாவி மனிதா நீயெல்லாம்
ஏன் பிறந்தாய் – இந்த மண்ணில்..!




எவன் ஆண்டாலென்ன..
அள்ளிக் கொண்டு போனவன்
எவன்?

எனக்கு உயிர் கொடுத்த
தலைவன் ஹட்லர் — உலகைக்
கொண்டா சென்றான்?
என்னை அடக்கியாண்ட
காந்தி வென்றானே...!

இல்லை மனித உணர்வுகளை சுமந்த
பாரதியும் என்னை சுமக்கவில்லை...!
உலகை சுமந்து சென்றவனும் எவனுமில்லை..!

என்னினத்தை அழித்துவிடு
உன்னினத்தை ஆதரித்துவிடு
என்னினத்தை கொன்றொழித்துவிடு
வரலாறுகளை உன் கையால் நிரப்பு
என்னினத்தை கொண்டு வரலாற்றை
அழிக்க முற்படாதே...!

**வீ.ராஜீ**
குயின்ஸ்பெரி



# சூரியனுக்கு நிகர்

உறவுகளை பிரித்து குடிமை கெடுத்து
சந்தோஷத்தில் சாம்பலை வீசிய சந்தர்ப்பவாதியே!
உன்னிடத்தில் நல்ல பண்புகள் இருக்கிறது
என்று நினைத்திருந்தேன் - நேற்று வரை
ஆனால் இன்று தான் தெரிகிறது,
உன்னிடத்தில் நல்லப்பாம்புகள் இருக்கிறதென்று...

பிரித்தாளும் தந்திரத்தை பிரித்தானியா
சொல்லிக் கொடுத்த பாடத்தை
நன்றாக நீ படித்திருக்கின்றாய்,
அதனால் தான் நீ வெற்றியும் கண்டிருக்கின்றாய்.
ஒரு கரம் புறாவை பறக்க விட்டு
மறுகரம் அதன் சிறகை உடைத்த சதிகாரரே!

உனக்குள் ஏன் இத்தனை ஏளனம்!
மண்ணையும், மரத்தையும், மாடியையும் சிதற
வைத்து எம் சோலையை பாலையாக்கலாம்
ஆனால் ஒரு போதும் உன்னால்
சோலையாக முடியவே...

கல்வியில் பெரியன், கலையில் முதல்வன்
என்றிருந்த என் பிரகாசிப்பை உன்னால்,
பொறுக்க முடியவில்லை அதைப் பார்த்துக்
கூட உன்னால் உயரவும் முடியவில்லை.

எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
தமிழின தனித்துவத்தின் நிழலைக் கூட
உன்னால் தொட முடியாது.
ஏனெனில் உன்னிடத்தில் இந்த
நினைப்புக்கள் நிறைவேற என்
தமிழினம் வெறும் கண்ணாடி கதவுகள்
அல்ல. அவை இரும்புத் திரைகள்......
வீர நடை போட்டு மார் தட்டி
நிற்குமே தவிர மார்பில் அம்பு
பாய்ந்து மயானம் மட்டும் தட்டி நிற்காது.

தன்னுயிரை அடமமானம் வைத்து
தன் முன்னிலையை திரும்பவும் திரட்ட
நினைக்கும் என் தமிழினம் நிச்சயம்....
நிதர்சனம் பெறும்
இதனிடையே உன்னால் அடிக்கப்பட்ட
ஆணிகளும், முற்கம்பிகளும் தானாகவே துருப்பிடித்து
தூக்கியெறியப்படும் அப்போது நீ அறிவாய்
தமிழினம் சூரியனுக்கு நிகரென்று.....

**ஆர். மனோகரன்**
(தமிழ்ப்பிரியன்)

# அழிந்து செல்லும் மலையக கலைகள்

தென்னிந்தியாவிலிருந்து தேயிலை தோட்டங்களுக்கு அடிமைகளாய் வரவழைக்கப்பட்ட இந்திய வம்சாவளியினரும், அவர் தம் வாழ்வியலும் தமிழ் இலக்கியத்தில் ஒரு தடம் பதித்து தனக்கென தனித்துவம் பெற்றுள்ளதோடு அதன் பரிணாம வளர்ச்சிப்பாதையையும் பெற்றுள்ளது. எனலாம்.

அந்த வகையில் மலையக மக்கள் என்று சொல்லப்படும் இந்திய வம்சாவளியினரின் கலைத்துவ படைப்புக்களையும் பிரதான இரு பகுதிகளாக பிரிக்கலாம்.

(அ) தெய்வீக வழிசார்ந்த கலைத்துவ படைப்புக்கள்.

(ஆ) அவர் தம் வாழ்வியலோடும், தொழிலோடும் சம்மந்தப்பட்ட வாழ்வியல் இலக்கியங்கள் இவ்விரண்டினையும் தன்னகத்தே கொண்டு இலக்கியத்தின் தளத்தினைப் பதித்துள்ள இக்கலைகளை சற்று விரிவாக நோக்குவோமானால், தெய்வக கலைகளானது புராணங்களுடனும் இந்திய வம்சாவளியினரின் கிராமிய தெய்வங்களின் வழிபாட்டுடன் சம்பந்தப்பட்ட கலைகளாகும். அவ்வாரான கலைகள் மானிடத்தின் தெய்வ வழிபாட்டு, முறையினையும் அந்த வழிபாட்டின் மூலம் விழுமியங்கள் பண்பாட்டுக்களை விளக்குவதாகவும் அமைந்து காணப்படுகின்றது எனலாம். அவ்வகையான கலைகளாக காமன்கூத்து, இராமர் பஜனை, அர்ச்சுனன் தவசு, பொன்னர் சங்கர் படுகலங்கள் தெய்விக கலை சார்ந்த தெருக்கூத்துக்கள் சுடலை கொளுத்துதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இரண்டாவது பகுதியினை நோக்குமிடத்து இம்மக்களின் வாழ்வியலும் அவரது தொழில்சார் பிரச்சினைகளையும் வெளியாகும், ஏனைய சமூகங்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் அம்மக்களால், தனது சுயமான கலையுணர்ச்சிகளையும் உள்ளடக்கி ஏற்ப்படுத்தப்பட்ட கலையாகும். அக்கலைகளாக கும்மி, கூத்து, கரகாட்டம், மாரடித்தல், தொழில்சார் நாட்டார் பாடல்கள், விளையாட்டுடன் தொடர்புபட்ட பாடல்கள், காவடியாட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த இரு வகையான கலைப்படைப்புக்களுக்கும் இம்மக்கள் தங்களது வாய்வழி இலக்கியங்களுடன் தனது பிரதேசத்திற்கே சொந்தமான பக்க வாத்தியங்களையும் பயன்படுத்துவர். இவ்வாரான கலைகள் தொன்னூருகளுடன் ஒரு பின்னடைவை கண்டுவிட்டது. தற்போது இந்த கலை தொடர்பான போதியளவு விளக்கமோ, தெளிவோ, நடைமுறையில் உள்ள எமது சமூகத்தில் காணப்படவில்லை என்றால் அது ஐயமில்லை. அவ்வாறான கலைகள் தொடர்பான தனித்தனி விளக்கங்களுடன் மறு பதிப்புக்களின் கொண்டுவர எண்ணுகிறேன். மறு பதிப்பில் கலக்கும் வரை...



ஆசிரியர் : **க. பரமேஸ்வரி**

பௌர்ணமி கலை இலக்கிய வட்டம்.

# கவிதைத் துளிகள்

அழுக்குகளை
சுமந்த
கர்ப்பிணி
-கடல்-

எந்த
வங்கியிலும்
சேமிக்கமுடியாத
கணக்கு
-சுவாசம்-

தனக்கு
பொருத்தமானவனிடம்
மட்டுமே
மனந்திறக்கிறாள்
-பூட்டு-

பெரிய மழையை
ஒரே துவாரத்தில்
பொழிந்தது.
-குடையின் ஓட்டை-

என் இரண்டு கால்கள்
எப்படி
இத்தனையாய் மாறின
-பாதச்சுவடு-

சிறையிடப்பட்ட
பூக்கள்
-மாலை-

எத்தனை பாதுகாப்பாயிருந்தாலும்
கதவோரத்தில்
தடுத்து விடப்படுகின்றன
-செருப்பு-

சேவல்
கூவியது
கண்விழித்தான்
-குருடன்-

கருமைகள்
போர்த்திக்கொண்ட
வெறுமைகள்
-இரவுகள்-

அழிப்பதற்காய்
அழிந்து போனது
-இரேசர்-

நா.மரியா என்டனீட்டா,
-நாவலப்பிட்டி-

## உன் பிரிவால்

ஒப்பற்றவளே உயர்வின்
சிகரமே!
உன் பிரிவால் என்
இதயமெனும் தாடகம்
தீ பிழம்பாய் எரிகிறது.

இனி கண்ணீர்த் துளிகள்
அருவியாக வந்து அணைக்கப் போகிறது.
இந்த பிள்ளைப் பிஞ்சு
நீயடைந்த மரணக்கரையை
நெருங்க இப்போது
கண்ணீர் ஓடம் கட்டுகிறது.

தொடங்கி தொடங்கி
முடித்துப் போன
எனது வாழ்க்கை
சித்திரங்கள் உன்னோடு முடங்கி போயின...

அறுத்து விழுந்த
ஆரம்ப பௌர்ணமியே
உன் புதைகுழியில்
என் கனவுகளுக்குமல்லவா
அடக்கம் செய்யப்பட்டுவிட்டன.?

## விடிவு

புழுதி படுக்கையிலே
புரண்டு படுக்கும் எம்மக்கள்
புதிதாய் பூப்பது எப்போது

நாளு சுவருக்குள்ளே
நடைபிணமாக நசுங்கிய
எம் மக்கள்
சந்தோஷம் காண்பது
எப்போது
தன் உதிரத்தை
உரமாக்கி உடல் சுரக்கும்
வியர்துளியை வித்தாய்
விதைக்கும் எம் மக்களுக்கு
விடிவு எப்போது...!

I. பாரதிராஜா

## துயரில் உறைதல்

விரிந்த பெருஞ்சாலை தன்னில்
இரைச்சல்களின் நெரிசலிடையே
நின்றபடி — என்
வீணை நரம்புகளை மீட்டியவாறு
ஆழ்ந்த காதலுக்குறிய
புதல்வர்களுக்கான எனது மடலை
நான் பாடுவேன். அவர்கள்
வயல் நிலங்களினதும்
தேயிலைக் காடுகளினதும்,
றப்பர் தோட்டங்களினதும்
புதல்வர்கள் — அவர்கள்
துயரில் உறைபவர்கள்
என் ஆழ்ந்த காதலுக்குறியவர்கள்

ஆங்கிலத்தில் :- C. V. வேலுப்பிள்ளை

தமிழில் :- **வே. தினகரன்**



சகல வகையான கனணி பாடநெறிகளும்
இங்கு நடைபெறுகிறது.
ASIAN
அடிப்படை பாடநெறிகள்
உயர்தர பாடநெறிகள்
Graphic Designing
Multi Media courses
Inter-net course
A/L Git Classes
Spoken English classes
aat Classes
REGISTERED WITH TERTIARY & VOCATIONAL EDUCATION COMMISSION
Act No: 20 of 1990-P01/0058
ASIAN COMPUTER SYSTEMS
Head Office:
250, George R.De.Silva Mawatha,
Kotahena
colombo 13
011 5338726
Branch:
83-1/2, Kotmale Road,
Nawalapitiya.
077-3696041